<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டுர்.</u>

**<u>IA.No.2 & IA.No.3/2021 in OS.No.68/2021</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | V.உமாசங்கர் | தொழில் | |
| தகப்பனார் பெயர் | A.வெங்கடாச்சலம் | வகுப்பு | |
| வயது | 47 | சமயம் | இந்து |
| நாள் | 26.10.2022 | கிராமம் | |
| சாட்சி | எ.ம.சா.1 | | |

இன்று 26.10.2022 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>**:–

1) நான் தற்போது மேட்டுர் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வட்டாட்சியருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்காக வட்டாட்சியரால் எனக்கு அளிக்கப்பட்ட **அங்கிகார கடிதம் எ.ம.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் மல்லிகுந்தம் கிராமம் சர்வே எண்.102 ற்குரிய UDR க்கு முந்தைய புலவரைபடத்தின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் மல்லிகுந்தம் கிராமம் சர்வே எண்.102 ற்குரிய UDR க்கு பிந்தைய புலவரைபடத்தின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் மல்லிகுந்தம் கிராமம் சர்வே எண்.102 ற்குரிய கணிணி பதிவிறக்க புலவரைபடத்தின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் மல்லிகுந்தம் கிராமம் சர்வே எண்.102 ற்குரிய UDR–க்கு முந்தைய "அ" பதிவேட்டின் ஆவணங்கள் தேடியும் கிடைப்படாததால் அதற்கான விளக்கக் கடிதம் **எ.ம.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் மல்லிகுந்தம் கிராமம் சர்வே எண்.102 ற்குரிய UDR–க்கு பிந்தைய "அ" பதிவேட்டின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) UDR–க்கு முன்பு மல்லிகுந்தம் கிராமம் சர்வே எண்.102 எவ்வளவு விஸ்தீரனம் உள்ளது என்றால், சர்வே எண்.102/2A ஆனது 4.19.5 ஹெக்டர்ஸ் அளவுடையது. பட்டா எண்.621, பட்டாதாரர் பெயர் துரைசாமி என்பவரது பெயரில் தாக்கல் ஆகியுள்ளது.

8) UDR க்கு முன்பு மல்லிகுந்தம் கிராமம் சர்வே எண்.102 க்குரிய புலவரைபடமானது எந்த வருடத்தில் தயாரிக்கப்பட்டது என்றால், 1968 ம் வருடம் தயாரிக்கப்பட்டது. UDR க்கு பின்பு மல்லிகுந்தம் கிராமம் சர்வே எண்.102 க்குரிய புலவரைபடமானது எந்த வருடத்தில் தயாரிக்கப்பட்டது என்றால், 1984 ம் வருடம் தயாரிக்கப்பட்டது.

9) UDR க்கு பின்பு மல்லிகுந்தம் கிராமம் சர்வே எண்.102 ஆனது 4 உட்பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. முதலாவதாக சர்வே எண்.102/2A1 ஆக 4.19.5 ஹெக்டர்ஸ் என்ற அளவிலும், சர்வே எண்.102/2A2 ஆக 2.67.5 ஹெக்டர்ஸ் என்ற அளவிலும் உட்பிரிவு ஆகியுள்ளது. மேற்படி சர்வே எண்.102/2A1 ஆனது துரைசாமி என்பவரது பெயரிலும், சர்வே எண்.102/2A2 ஆனது மாரிமுத்து கவுண்டர் என்பவரது பெயரிலும் உள்ளது.

10) மேற்படி சர்வே எண்.102/2A1 ஆனது சர்வே எண்.102/2A1A1 ஆக அதன் பரப்பு 4.09.67 ஹெக்டர்ஸ் பட்டா எண்.3873 பட்டாதாரர்கள் பெயர் காயத்ரி, இளவரசி, கலா ஆகியோர்கள் பெயரில் தாக்கல் ஆகியுள்ளது. இரண்டாவதாக சர்வே எண்.102/2A1A2 ஆக அதன் பரப்பு 0.03.25 ஏர்ஸ் பட்டா எண்.3919 பட்டாதாரர் பெயர் கமலம், மூன்றாவதாக சர்வே எண்.102/2A1A3 ஆக அதன் பரப்பு 0.04.08 ஏர்ஸ் பட்டா எண்.3920, பட்டாதாரர் பெயர் விஜயா, நான்காவதாக சர்வே எண்.102/2A1B அதன் பரப்பு 0.02.50 ஏர்ஸ் பட்டா எண்.1845 பட்டாதாரர்கள் சென்றாயன் மற்றும் 13 நபர்கள் பெயரில் தாக்கல் ஆகியுள்ளது.

11) எ.ம.சா.ஆ.4 புலவரைபடத்தில் தாவாவில் உள்ள வழிப்பாதையானது எந்தெந்த சர்வே எண்களின் வழியாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், ச.எண்.102/2A1A1 மற்றும் ச.எண்.102/2A2B ஆகியவற்றின் வழியாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பாதை கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி செல்கிறது.

12) ச.எண்.102/2A1B ல் மேற்படி பாதை தெற்கில் இருந்து வடக்கு நோக்கி செல்கிறது. ச.எண்.102/2A1A1 ல் மேற்படி பாதை செல்வதற்கான விளக்கிகள் (குறியீடு) செய்யப்பட்டுள்ளது. மேற்படி குறியீடுகள் எந்த வகையான பாதையை குறிக்கிறது என்றால், அது வண்டிப்பாதை செல்வதற்கான ஒரு குறியீடு ஆகும்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

1) ச.எண்.102/2A ல் UDR க்கு முன்போ அல்லது UDR க்கு பின்போ மேற்படி வழித்தடமானது தனிநபருக்கோ, அரசுக்கோ சொந்தமானது என்பதுபோல் தனியாக உட்பிரிவு எதுவும் செய்யப்படவில்லை என்றால், சரிதான்.

2) சர்வே எண்.102/2A UDR க்கு முன்பாக 4.19.5 ஹெக்டர் நிலமும், துரைசாமி

என்பவரது பெயரில் விவசாய நிலமாக உள்ளது என்றாலும், அதில்தான் மேற்படி பாதைக்குரிய விளக்க குறியீடுகள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றாலும், சரிதான்.

3) UDR க்கு முன்பு மேற்படி சர்வே எண்.102/2A ல் உள்ள நிலத்தில் வண்டிப்பாதைக்கான குறியீடுகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால், சரிதான். UDR க்கு பின்பு ஏற்படுத்தப்பட்ட மேற்படி வண்டிப்பாதையின் நீளம் மற்றும் அகலம் குறித்து வருவாய் ஆவணங்களில் எவ்வித குறிப்புகளும் இல்லை என்றால், சரிதான்.

4) கிராம நிர்வாக அலுவலர் புலத்தணிக்கை செய்து அளித்த அறிக்கையின் அடிப்படையில் நான் வரைபடத்தில் வழித்தடம் உள்ளதாக கூறுகிறேன் என்றால், சரிதான். UDR ல் சர்வே எண்.102/2A ல் உள்ள அளவு 4.19.5 ஹெக்டர்ஸ் நிலமானது துரைசாமி என்பவரது பெயரில் தாக்கல் ஆகி இருந்தது என்றால், சரிதான். பின்னிட்டு அந்த புல எண் 4 உட்பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

5) சர்வே எண்.102/2A2 ல் மாரிமுத்து பெயரில் தாக்கல் ஆகியுள்ள புலவரைபடத்தில் மேற்படி வழித்தடத்தின் நிளம் மற்றும் அகலம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால், சரிதான். துரைசாமி என்பவரது பெயரில் சர்வே எண்.102/2A2 ல் உள்ள நிலம்தான் பின்பு சர்வே எண்.102/2A1A1 ஆகவும், ச.எண்.102/2A1A2 ஆகவும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். அதில் பெரும்பாலான நிலப்பரப்பு துரைசாமி பெயரிலிருந்து காயத்ரி, இளவரசி, கலா ஆகியோரது பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான்.

6) இதர சர்வே எண்களில் உள்ள நிலப்பரப்பு குறைவான அளவில் உள்ளது

என்று சொன்னால், சரிதான். மேற்படி இதர சர்வே எண்கள் சர்வே எண்.102/2A1A1 ன் தென்புறமாக அமைந்துள்ளது என்று சொன்னால், சரிதான்.

7) சர்வே எண்.102/2A1A2 மற்றும் ச.எண்.102/2A1A3 ஆகியவற்றில் மேற்படி வழித்தடம் சம்பந்தமாக குறியீடுகள் எதுவும் இல்லை என்று சொன்னால், சரிதான்.

8) பொதுவாக புலவரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறியீடு நடைபாதையாக இருந்தால் புள்ளிகளாக காட்டப்பட்டிருக்கும் என்றால், சரிதான். தனிநபர்களது பட்டா நிலங்களில் வழிப்பாதை இருந்தால் அதை புலவரைபடத்தில் குறிப்பிட்டு காண்பிக்கப்படும் என்றால், அவ்வாறு காண்பிக்கப்படுவதில்லை.

9) தனிநபருக்குரிய பட்டா நிலத்தில் உள்ள பாதையை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி வருவதால் மேற்படி பாதை குறித்து வருவாய் ஆவணங்கள் மற்றும் புலவரைபடத்தில் குறிப்பாக தெரிவித்து காண்பிக்கப்படுமா என்றால், இல்லை.

10) எ.ம.சா.ஆ.4 ல் வழித்தடத்தின் அளவுகள் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், நீளம் மற்றும் அகலம் குறிப்பிடப்படவில்லை. ஆனால் மேற்படி வழித்தடத்தின் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி செல்லும் நுழைவாயில் பகுதியில் 7 மீ என்று உள்ளது, மற்ற அளவுகள் எதுவும் அதில் இல்லை.

11) பொதுவாக அவ்வாறு பாதை இருந்தால், அரசு ஆவணங்களில் அதன் சர்வே எண் அளவுகள் குறித்து விளக்கப்பட்டிருக்கும் என்றால், சரிதான்.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.